# *20*

# அற்புதங்களின் மூன்றாம் தொகுப்பு

## [9:18-38]

*மூன்றாவதும் கடைசியானதுமான அற்புதங்களின் தொகுப்பு இந்தப் பாடவரிசையில் அடுத்து வருகிறது (9:18-34). முந்திய இரண்டு தொகுப்புகளில் போன்றே, இந்தத் தொகுப்பும் மூன்று வித்தியாசப்பட்ட வரலாறுகளைக் கொண்டுள்ளது. டக்ளஸ் R. A. ஹேர் அவர்கள், பின்வருமாறு உற்றுநோக்கினார்:*

> *இந்த மூன்று வரலாறுகளுமே "இரட்டை அற்புதங்களாக" உள்ளன. முதலாவது, மரித்த பெண்ணை உயிர்ப்பித்தலுடன் பெரும்பாடுள்ள பெண் குணமாக்கப்படுதலை ஒன்றிணைக்கிறது [9:18-26], இரண்டாவது, பார்வையற்ற இரு மனிதர்கள் பார்வை திரும்பக் கிடைக்கப்பெற்றதை அறிவிக்கிறது [9:27-31], மற்றும் மூன்றாவது, இரட்டை வாதைகள் கொண்ட [வாய்பேச இயலாத ஒருவர்] அசுத்த ஆவியால் பிடிக்கப்பட்ட நிலையில் நோயாளியாக இருந்து குணமானது [9:32-34] பற்றிக் கூறுகிறது.*[1]

*இந்தப் பாடவரிசையில் விசுவாசம் என்பது பொதுவான கூறாக உள்ளது: ஜெப ஆலயத்தலைவர் ஒருவரின் மற்றும் பெரும்பாடு உள்ள பெண்ணின் விசுவாசம் (9:18, 20-22), பார்வையற்ற இரு மனிதர்களின் விசுவாசம் (9:27-29) மற்றும் பிசாசு பிடித்த ஒருவரைக் குணமாக்கியதைக் கண்ட மக்கள் கூட்டத்தின் விசுவாசம் (9:32, 33).*[2]

## பெரும்பாடு உள்ள பெண் குணமாகுதலும் யவீருவின் மகள் உயிரோடு எழுப்பப்படுதலும் *(9:18-26)*

***18**அவர் இவைகளை அவர்களுக்குச் சொல்லிக் கொண்டிருக்கையில், தலைவன் ஒருவன் வந்து அவரைப் பணிந்து: என் மகள் இப்பொழுதுதான் மரித்துப்போனாள்; ஆகிலும், நீர் வந்து அவள்மேல் உமது கையை வையும், அப்பொழுது பிழைப்பாள் என்றான்.*

***19**இயேசு எழுந்து, தம்முடைய சீஷரோடுகூட அவன் பின்னே போனார்.*

***20**அப்பொழுது; பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடுள்ள ஒரு ஸ்திரீ:*

***21**நான் அவருடைய வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன் என்று தன் உள்ளத்தில் எண்ணிக்கொண்டு, அவர் பின்னாலே வந்து, அவருடைய வஸ்திரத்தின் ஓரத்தைத் தொட்டாள்.*

**[22]இயேசு திரும்பி, அவளைப் பார்த்து: மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது என்றார். அந்நேரம் முதல் அந்த ஸ்திரீ சொஸ்தமானாள்.**
**[23]இயேசுவானவர் தலைவனுடைய வீட்டிலே வந்து, தாரை ஊதுகிறவர்களையும், இரைகிற ஜனங்களையும் கண்டு:**
**[24]விலகுங்கள், இந்தச் சிறு பெண் மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள் என்றார். அதற்காக அவரைப்பார்த்து நகைத்தார்கள்.**
**[25]ஜனங்கள் வெளியே துரத்தப்பட்ட பின்பு, அவர் உள்ளே பிரவேசித்து, அந்தச் சிறுபெண்ணின் கையைப் பிடித்தார்; உடனே அவள் எழுந்திருந்தாள்.**
**[26]இந்தச் சங்கதி அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று.**

*ஒன்றுக்கு மேற்பட்ட பகுதிகளைக் கொண்ட இந்த வரலாறு, முதல் நூற்றாண்டில் யூத சமூகத்தில் அடிக்கடி தாழ்த்தப்பட்டிருந்த, பெண்கள் மற்றும் குழந்தைகள் மீது இயேசுவின் பரிவிரக்கத்தைச் செயல்விளக்கப்படுத்துகிறது. மற்ற ஒப்பீட்டு சுவிசேஷங்களுடன் ஒப்பிடுகையில், இந்த வரலாறு பற்றிய மத்தேயுவின் விபரம் சுருக்கமானதாக உள்ளது. மாற்கு சுவிசேஷத்தில் இருபத்தி மூன்று வசனங்கள் இதற்கு ஒப்புக்கொடுக்கப்பட்டுள்ளன (மாற்கு 5:21-43); லூக்கா சுவிசேஷத்தில் இது பதினேழு வசனங்களில் கூறப்பட்டுள்ளது (லூக்கா 8:40-56), ஆனால் மத்தேயு சுவிசேஷத்தில் இதற்கு ஒன்பது வசனங்கள் மாத்திரமே தரப்பட்டுள்ளன.*

***வசனம் 18.*** *உபவாசித்தல் பற்றி யோவானுடைய சீஷர்களிடம் இயேசு பேசிக்கொண்டு இருக்கையில், (ஜெப ஆலய)* **தலைவன் ஒருவன் வந்து அவரைப் பணிந்து கொண்டார்.** *"ஜெப ஆலய" என்பது NASB வேதாகமத்தில் உட்செருகப் பட்டுள்ளது, இது ஒருவேளை மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷங்களில் உள்ள இணை விபரங்களின் அடிப்படையில் செய்யப்பட்டிருக்கலாம். இந்த "தலைவரின்" (archōn), பெயரை மத்தேயு தரவில்லை, ஆனால் லூக்கா தமது வாசகர்களுக்கு, இந்த மனிதரின் பெயர் யவீரு "ஜெபஆலயத்தலைவரின் ஒருவனாக" இருந்தார் என்றும் தகவல் அளித்தார் (லூக்கா 8:41; NIV). யவீரு "ஜெபஆலயத்தலைவரின் ஒருவனாக" இருந்தார் என்று மாற்கு கூறினார் (மாற்கு 5:22; NIV). சில ஜெப ஆலயங்களில் ஒன்றுக்கு மேற்பட்ட தலைவர்கள் இருந்தனர், அவர்கள் மூப்பர்களின் பெரிய குழுவில் இருந்து தேர்ந்து கொள்ளப்பட்டிருந்தனர்.*

*கப்பர்நகூமில் இருந்த ஜெப ஆலயத்தின் உயர் தலைவர்களில் ஒருவராக யவீரு இருந்தார். இந்த மனிதர்கள் ஜெப ஆலயத்தின் எல்லா நடவடிக்கைகளுக்கும் பொறுப்பாளிகளாக இருந்தனர் (4:23; 8:5 ஆகியவற்றின் மீதான விளக்கங்களைக் காணவும்). கப்பர்நகூமில் நன்கு அறியப்பட்டு மதிக்கப்பட்டு இருந்த இம்மனிதர், தாழ்மையுடன் இயேசுவுக்கு "முன் பணிந்துகொண்டார்." "பணிந்து" என்பதற்கான (proskuneō) கிரேக்க வார்த்தை "ஆராதித்தல்" அல்லது "பயபக்தி செலுத்துதல்" என்று அர்த்தப்படமுடியும் (2:2ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இந்த சந்தர்ப்பப் பொருளில், பிந்திய அர்த்தமே சரியானதாக இருக்க சாத்தியக்கூறு உள்ளது.*

*நம்பிக்கை இழந்த நிலையில் யவீரு* **என் மகள் இப்பொழுதுதான் மரித்துப்போனாள்; ஆகிலும், நீர் வந்து அவள்மேல் உமது கையை வையும்,**

***அப்பொழுது பிழைப்பாள்*** *என்று இயேசுவினிடம் கூறினார். கப்பர்நகூமில் இயேசு அற்புதங்களைச் செய்து, குணமாக்குபவர் என்ற வகையில் தமது புகழை நிலைநாட்டி இருந்தார். இதற்கு முன்பே, கப்பர்நகூமில் இருந்த மூப்பர்கள், ரோமானிய நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரரில் ஒருவர் திமிர்வாத நோய் கொண்டிருந்ததால், அவருக்கு உதவும்படி இயேசுவினிடத்தில் வேண்டிக் கொண்டிருந்தனர் (8:5ன் மீதான விளக்கங்களைக் காணவும்). இருப்பினும் அந்த வேளை முதல், வேதபாரகரும் பரிசேயரும் இயேசுவின் ஊழியத்தை எதிர்க்கத் தொடங்கி இருந்தனர் (9:3, 11). மார்க்கரீதியான உயர்வகுப்பினரின் எதிர்ப்புகள் சாத்தியப்படும் என்பதை அறித்திருந்த யவீரு, நம்பிக்கையற்ற நிலையில் இயேசுவின் உதவியை நாடினார்.*[3]

*இந்தத் தலைவர், தமது வீட்டிற்கு இயேசு வந்து தமது மகளைக் குணமாக்கும்படி கேட்டுக் கொள்வதற்காக அவரிடத்தில் வந்திருந்தார். அவர் தமது வீட்டிற்கு வரும்படி இயேசுவைக் கெஞ்சிக் கேட்டுக்கொண்டதில் அவரது அக்கறையின் அளவைக் காணமுடியும் (லூக்கா 8:41). அந்த அதிகாரி தமது மகளைப் பற்றி* "my little daughter" *என்று மென்மையாகக் குறிப்பிட்டார் (மாற்கு 5:23) லூக்கா 8:41ன் படி, யவீருவின் மகள் "பன்னிரண்டு வயதுள்ளவளாக" மற்றும் "மரண அவஸ்தையாக" இருந்தாள். இருப்பினும் மத்தேயு, அவள் ஏற்கனவே மரித்துப்போனாள் என்று கூறுகிறார். இந்த வேறுபாட்டை நாம் எவ்வாறு இணைக்கப்படுத்த முடியும்? (1) "விரிவான விபரம் கொண்ட இந்தப் பகுதியை மத்தேயு வெகுவாகச் சுருக்கி உரைத்தார்" என்பதே வேறுபாடாக இருக்கலாம்.*[4] *(2)* H. *லியோ போல்ஸ் அவர்கள் கருத்துரைத்தபடி, "தகப்பனார் அவள் மரிக்கும் நிலையில் விட்டு வந்திருந்தார், மற்றும் அவர் இயேசுவினிடத்தில் வந்த வேளையில், அவள் மரிக்கும் நிலையில் விட்டு வந்திருந்தார், மற்றும் அவர் இயேசுவினிடத்தில் வந்த வேளையில், அவள் மரித்திருக்கலாம் என்று அவர் நினைத்தார்."*[5] *(3) வில்லியம் ஹென்ரிக்ஸென் அவர்களால் பின்வரும் மூன்றாவது சாத்தியக்கூறு பரிந்துரைக்கப்பட்டது:*

> *மாற்கு மற்றும் லூக்கா சுவிசேஷங்களின்படி, முதலில் யவீரு பிள்ளையைக் குணமாக்கும்படி கேட்டுக் கொண்டிருந்தார், பின்பு அவளது மரணம் பற்றிய தகவல் வந்தபின்பு, அவர் பயப்படாமல் விசுவாசமாக இருக்கும்படி கர்த்தரால் கேட்டுக்கொள்ளப் பட்டிருந்தார். எனவே இப்போது அவர் தமது வேண்டுகோளை புதுப்பித்து, இயேசு வந்து மரித்த பெண்பிள்ளையின்மீது கை வைக்கும்படி மாற்றி வேண்டிக்கொண்டார், அத்துடன் அவர் "அப்பொழுது பிழைப்பாள்" என்றும் கூடுதலாகக் கூறினார்.*[6]

*குணமாக்கவும் மரித்தோரில் இருந்து உயிர்ப்பிக்கவும்கூட கர்த்தர் கொண்டிருந்த வல்லமையில் யவீரு கொண்டிருந்த மாபெரும் விசுவாசத்தை அவர் விளக்கப்படுத்தினார். இயேசு - தமது ஊழியத்தின் இந்த வேளை வரையிலும் - எவரொருவரையும் மரித்தோரில் இருந்து எழுப்பியது இல்லை என்பதால், இது யவீருவின் விசுவாசம் குறிப்பிடத்தக்கதாக உள்ளது.*

***வசனம் 19. இயேசு*** *தமது இடத்தில் இருந்து உடனடியாக எழுந்து அம்மனிதரின் வீட்டிற்கு அவரைப் பின்தொடர்ந்து சென்றதன் மூலம், அம்மனிதரின் வேண்டுகோளுக்குப் பதில் செயல் செய்தார்.* ***அவரது சீஷர்களும்***

அவரைப் பின்பற்றிச் சென்றனர்.

**வசனங்கள் 20, 21.** அவர்கள் யவீருவின் வீட்டிற்குச் சென்று கொண்டிருந்தபோது, இயேசுவைப் பின்தொடர்ந்து வந்த மக்கள் கூட்டத்தினர் "அவரை நெருக்கினார்கள்" (மாற்கு 5:24). இந்தக் கூட்டத்தில், இயேசுவின் குணமாக்கும் தொடுதலை பெரிதும் தேடிய **பெண் ஒருத்தி** இருந்தாள். அவள் **பன்னிரண்டு வருஷமாய்ப் பெரும்பாடு** என்ற நோயினால் துன்பப்பட்டுக் கொண்டிருந்தாள். "பெரும்பாடு" என்பதற்கான (*haimorroeō*) கிரேக்கச் சொற்றொடர், லேவியராகமம் 15:33ம் (LXX) வசனத்திலும் காணப்படுகிறது, இது அநேகமாக மாதவிடாய்ப் பிரச்சனைகளைக் குறிப்பதாக இருக்கலாம். மைல்கேல் J. வில்க்கின்ஸ் அவர்கள், "இது பெரும்பாலும், இந்தப்பெண் மாதவிடாய்ப் போக்கு வழக்கத்திற்கு அதிகமாக நீடித்து, இரத்தசோகையையும் ஏற்படுத்தக்கூடிய, மட்டுமீறிய மாதவிடாய்ப் போக்கு என்ற நோயைக் கொண்டிருந்தாள் என்று சுட்டிக்காண்பிக்கிறது எனலாம்" என்று எழுதினார்.[7]

அந்தப் பெண்ணின் கவலைக்குரிய சூழ்நிலையானது, உடல்ரீதியாக, பொருளாதாரரீதியாக, சமூகரீதியாக மற்றும் மார்க்கரீதியாக அவளைப் பாதித்திருந்தது. அவள், "அநேக வைத்தியர்களால் மிகவும் வருத்தப்பட்டு" (மாற்கு 5:26) மற்றும் "ஒருவனாலும் சொஸ்தமாக்கப்படாதிருந்தாள்" (லூக்கா 8:43). இந்த வைத்தியர்கள், நோயாளிகளை பாதிக்கும் மாயவேலையை நடத்துபவர்களாக இருந்திருக்கலாம். குணம் கண்டறியும் முயற்சியில் இவள் தனது நிதி ஆதாரமூலங்கள் யாவற்றையும் இழந்திருந்தாள் (மாற்கு 5:26).

இந்தப் பெண், தனது பிரச்சனைக்கு சிகிச்சை எதையும் கண்டறியாத படியால், அவள் தொடர்ந்து, சடங்காச்சார ரீதியாக அசுத்தமானவளாக - அவளுக்கு வெட்கக்கேட்டையும் துயரத்தையும் கொண்டுவந்த நிலையில் - இருந்தாள். அவள் தொட்ட எந்த ஒரு பொருளும் அல்லது எந்த ஒரு நபரும் தீட்டுள்ளதாக/தீட்டுள்ளவராக ஆயின(ர்) (லேவியராகமம் 15:19-27). இவள் தனது வாலிபத்தின் தொடக்க நாட்களில் இந்த நியையைப் பெற்றவளாக இருந்திருந்தால், இவள் திருமணம் முடித்துக்கொள்ள விரும்பத்தகாதவளாக இருந்திருப்பாள். இவள் திருமணத்திற்குப் பின் இவளுக்கு இந்த நிலை ஏற்பட்டு இருந்தால், இவளும் இவளுடைய கணவரும் பாலுறவு கொள்ளுதல் என்பது நியாயப்பிரமாணத்திற்கு விரோதமான செயலாக இருந்திருக்கும் (லேவியராகமம் 18:19). இதன் விளைவாக இவள் பிள்ளையற்றவளாக இருந்திருப்பாள், இது அடிக்கடி, விவாகரத்துச் செய்தலை விளைவிப்பதாக இருந்தது. இவள் தனது தீட்டான நிலையில், ஆராதிப்பதற்குத் தேவாலயத்திற்குள் செல்ல இயலாதிருந்தாள், மற்றும் இவள் பொது கடைவீதிக்குச் செல்லக் கூடாதவளாக இருந்தாள். இவள் ஒரு ஏழைப் பெண்ணாக இருந்தாள், இவள் எல்லாப் பக்கங்களிலும் பாதிக்கப்பட்டவளாக இருந்தாள்.

இந்தப் பெண், தான் காணப்படுவதை விரும்பாதிருந்தாள், எனவே இவள் இயேசுவுக்குப் **பின்னாலே வந்து நின்றாள்.** இவளது பய உணர்வுள்ள இரகசியத் தன்மையானது, இயேசுவுக்கு முன்னால் மண்டியிட்டிருந்த ஜெப ஆலய அதிகாரியின் தைரியத்திற்கு நேர் மாறானதாக இருந்தது (9:18). இவள் தன்னைக் குணமாக்க இயேசு வல்லமை கொண்டிருந்தார் என்று விசுவாசித்தாள், நான் அவருடைய **வஸ்திரத்தையாகிலும் தொட்டால் சொஸ்தமாவேன்** என்று

இவள் நம்பினாள் (காண்க 14:36; நடபடிகள் 5:15; 19:11, 12).

**வஸ்திரத்தின் ஓரம்** என்பது, யூத ஆண்கள் தாங்கள் தேவனுடைய மக்களாக இருந்ததைத் தங்களுக்கு நினைவூட்டும் வகையில், தாங்கள் அணிந்த வெளி வஸ்திர ஓரங்களின் தொங்கல்களைக் குறிப்பிடுவதாக இருக்கலாம் (எண்ணாகமம் 15:37-41; உபாகமம் 22:12; காண்க மத்தேயு 14:36; 23:5). இந்தப் பெண், இயேசுவின் உடையினுடைய இந்தப் பாகத்தைத் தொட்டதும், "உடனே அவளுடைய உதிரத்தின் ஊறல் நின்றுபோயிற்று; அந்த வேதனை நீங்கி ஆரோக்கியமடைந்ததை அவள் தன் சரீரத்தில் உணர்ந்தாள்" (மாற்கு 5:29). இந்தப் பெண் குணமானதை உணர்ந்தாள், மற்றும் இயேசுவும் அதை உணர்ந்தார். "உடனே இயேசு தம்மிலிருந்து வல்லமை புறப்பட்டதைத் தமக்குள் அறிந்து" உணர்ந்தறிந்தார் (மாற்கு 5:30).

**வசனம் 22.** பின்பு இயேசு மக்கள் கூட்டத்தை நோக்கித் திரும்பி, "என் வஸ்திரங்களைத் தொட்டது யார்?" என்று ஒருவேளை கடுமையாகக் கேட்டார் (மாற்கு 5:30). மக்கள் கூட்டத்தில் நெருக்குதலை அறிந்திருந்தும், அவர் இப்படிப்பட்ட கேள்வியைக் கேட்டதைக் கண்டு சீஷர்கள் திகைத்துப் போயினர் (மாற்கு 5:31). அவரது பதில்செயல் அந்தப் பெண்ணை அதிகமாக அச்சுறுத்திற்று, அவள், தானே அவரது ஆடையின் ஓரத்தைத் தொட்டவளாக இருந்ததால், "பயந்து, நடுங்கி, அவர் முன்பாக வந்து விழுந்து, உண்மை யையெல்லாம் அவருக்குச் சொன்னாள்" (மாற்கு 5:33). தீட்டான பெண் என்ற வகையில் அவள் தேவனுடைய பரிசுத்த மனிதர் ஒருவரை விருப்பநோக்குடன் தொட்டதினால் பொதுவாக எல்லாரும் காணும்படியான காட்சியைத் தான் ஏற்படுத்தியதற்காகப் பயந்தாள் என்பதில் சந்தேகம் இல்லை.

**இயேசு** அவளிடத்தில் **மகளே, திடன்கொள், உன் விசுவாசம் உன்னை இரட்சித்தது** என்று மறு உறுதிப்படுத்தினார். "திடன்கொள்" என்ற வார்த்தை முன்பு திமிர்வாதக்காரரிடம் இயேசு பேசியதை நமக்கு நினைவூட்டுகிறது: "மகனே, திடன்கொள்" (9:2). அச்சம் அடைந்த இந்தப் பெண்ணுக்கு அதிகம் தேவைப்பட்ட ஆறுதலையும் நிம்மதியையும் இயேசு கொடுத்தார். அவரது வார்த்தைகள், அவள் வியாதிப்பட்டவளாக இருந்திருந்தபோதிலும், அவள் மதிப்புமிக்கவளாக இருந்தாள் என்பதை அவளுக்கு உறுதிப்படுத்தின. அவர் அவளது "விசுவாசத்தை" பாராட்டினார். அவள் தனது வியாதியில் இருந்து குணமாக்க இயேசு கொண்டிருந்த வல்லமையை விசுவாசித்தது, அவளை செயல்படும்படி வழிநடத்தி, அவரது ஆடையின் ஓரத்தைத் தொடவைத்தது. இதன் விளைவாக, தேவனால் அவள் "சுகமாக்கப்பட்டாள்." மாற்கு 5:29 மற்றும் லூக்கா 8:44 ஆகிய வசனப்பகுதிகள், அந்தப் பெண் இயேசுவின் ஆடையைத் தொட்ட மாத்திரத்தில் குணமானாள் என்று சுட்டிகாண்பிக்கின்றன. "ஆரோக்கியமடைந்தாள்" என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள (*sōizō*) கிரேக்க வினைச்சொல், ஆவிக்குரிய இரட்சிப்பைக் குறிக்கும் சந்தர்ப்பப்பொருளில் "இரட்சிக்கப்பட்டார்" என்று அடிக்கடி மொழிபெயர்க்கப் பட்டுள்ளது. இங்கு இதன் பயன்பாடு, விசுவாசம் மற்றும் இரட்சிப்பு ஆகியவற்றிற்கு இடையில் உள்ள தொடர்பை மறைமுகமாகக் குறிப்பதாக இருக்கலாம்.

இயேசு அந்தப் பெண்ணைக் குணமாக்கியபின்பு, அவர்களை அதிகமான மக்கள், ஒருவேளை யவீருவின் வீட்டில் இருந்து வந்த வேலையாட்கள் சந்தித்தனர், அவர்கள் வந்து அந்தப்பெண் இறந்து போனாள்

*என்று தகவல் தெரிவித்தனர் (மாற்கு 5:35). அவர்களின் தகவல்களை இயேசு தற்செயலாகக் கேள்விப்பட்டு, "பயப்படாதே, விசுவாசமுள்ளவனாயிரு" என்று யவீருவிடம் கேட்டுக்கொண்டார் (மாற்கு 5:36). பின்பு அந்தக் குழு யவீருவின் வீட்டை நோக்கிச் செல்லத் தொடர்ந்தது; ஆனால் இந்த இடத்தில் இயேசு தமது சீஷர்களின் உள்வட்டக் குழுவை - பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோரை - மாத்திரம், தம்முடன் வர அனுமதித்தார் (மாற்கு 5:37).*

***வசனம் 23.*** *அவர்கள்* **தலைவருடைய வீடு** *சென்று சேர்ந்தபோது,* **இயேசு மக்கள் கூட்டத்தை** *எதிர்கொண்டார் மற்றும் அந்தப் பெண்ணின் மரணத்தை அடையாளப்படுத்திய தாரை ஊதும் சத்தத்தைக் கேட்டார். தொழில்முறை துக்கம் கொண்டாடுபவர்கள் சவ அடக்கங்களுக்கு அடிக்கடி கூலிக்கு அமர்த்தப்பட்டனர்; இவர்களில் தாரை ஊதுபவர்களும் புலம்பி அழும் பெண்களும் இருந்தனர் (எரேமியா 9:17, 18; 48:36; ஆமோஸ் 5:16).[8] இஸ்ரவேல் மக்களில் மிகவும் ஏழையாக இருந்தவர்கூட, தனது மனைவி இறக்கும்போது, அவளைக் குறித்துத் துக்கம் கொண்டாடுவதற்கு தாரை ஊதுபவர்கள் இருவரையும் புலம்பி அழும் பெண் ஒருத்தியையும் கூலிக்கு அமர்த்தும்படி எதிர்பார்க்கப்பட்டார் என்று ரபீத்துவப் பாரம்பரியம் கூறுகிறது.[9] யவீருவின் வீட்டில் புலம்பி அழுபவர்கள் அத்தனை பேர் கூடியிருந்தது ஏன் என்பதையும் அப்படிப்பட்ட* **இரைதல்** *ஏன் இருந்தது என்பதையும், யவீரு செல்வாக்குள்ள மனிதராக இருந்தார் என்ற உண்மையானது விளக்கப்படுத்துகிறது. தாரைகள் என்பவை நாணல் தட்டைகள், மூங்கில்கள் மற்றும் எலும்புகள் ஆகியவற்றில் இருந்து தயாரிக்கப்பட்டன. அவைகளைச் செய்வதும் பொதுவான பயன்பாட்டிற்கு கிடைக்கச் செய்தலும் சுலபமாக இருந்தன. அடிக்கடி இந்தத் தாரை என்பது "கைதட்டுதலுடன் இணைந்து" ஊதப்பட்டது.[10]*

***வசனம் 24.*** *ஒரு நபர் இறந்த நாளிலேயே சவ அடக்கம் நடைபெற்றது என்பதால், புலம்பி அழுபவர்கள் யவீருவின் வீட்டில் விரைவாகக் கூடினர் (நடபடிகள் 5:5, 6, 10). இருப்பினும் இயேசு,* **விலகுங்கள், இந்தச் சிறு பெண் மரிக்கவில்லை, நித்திரையாயிருக்கிறாள்** *என்று கூறி, எல்லாரையும் வீட்டைவிட்டு வெளியே அனுப்பும்படி இயேசு கட்டளையிட்டார். அவர் கூறியதைக் கேட்ட மக்கள், அவள் இறந்து போயிருந்ததை அறிந்ததால், அவரைப்பார்த்து* **நகைத்தார்கள்** *(9:18; மாற்கு 5:35; லூக்கா 8:49, 53). அவள் மரண நித்திரையாயிருந்தாள் என்பதைக்காட்டிலும் அதிகமாக எதையும் இயேசு அர்த்தப்படுத்தி இருக்கமாட்டார், மற்றும் அவர் அவளை உயிரோடு எழுப்ப வல்லமை கொண்டிருந்தார். வில்லியம் பார்க்ளே அவர்கள் பின்வருமாறு விளக்கப்படுத்தினார்:*

> *அந்தப் பெண் உறங்கிக்கொண்டிருந்தாள் என்று இயேசு கூறியபோது, அவர் தாம் கூறியதை மிகச்சரியாக அர்த்தப்படுத்தினார் என்று கூற வாய்ப்புள்ளது. ஆங்கிலமொழியில் போன்றே கிரேக்க மொழியிலும், இறந்துபோன நபர் ஒருவர் நித்திரையில் இருப்பதாக அடிக்கடி கூறப்படுவது உண்டு. உண்மையில், ஆங்கிலத்தில் உள்ள cemetery என்ற வார்த்தை, koimētērion, என்ற கிரேக்க வார்த்தையில் இருந்தே வந்துள்ளது, இது மக்கள் உறங்கும் இடம் என்று அர்த்தப்படுகிறது. கிரேக்க மொழியில் உறக்கம் என்பதற்கு இரண்டு வார்த்தைகள் உள்ளன; அவற்றில் ஒன்று*

*koimasthai,* என்பதாகும், இது இயல்பான நித்திரை மற்றும் மரண நித்திரை ஆகிய இரண்டிற்குமே மிகவும் பொதுவாகப் பயன்படுத்தப்படுகிறது; இன்னொரு வார்த்தை *katheudein,* என்பதாகும், இது மரண நித்திரைக்கு மிகவும் அடிக்கடி பயன்படுத்தப்படுவதில்லை, ஆனால் வழக்கமாக இயல்பான நித்திரைக்குப் பயன்படுத்தப்படுகிறது. இவ்வசனப்பகுதியில் *katheudein* என்ற இந்த வார்த்தையே பயன்படுத்தப்பட்டுள்ளது.[11]

ஜேக் P. லூயிஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:

*நித்திரை என்பது மரணத்திற்கு பழைய ஏற்பாட்டில் இருந்து (katheudein என்பதற்கு; தானியேல் 12:2; 1 தெசலோனிக்கேயர் 5:10; ஆனால் koimaomai என்பதற்கும்; யோவான் 11:11; மத்தேயு 27:52; நடபடிகள் 7:60; 1 கொரிந்தியர் 15:6; 1 தெசலோனிக்கேயர் 4:13-15) எடுத்தாளப்படும் புதிய ஏற்பாட்டு விவரிப்பாக உள்ளது. இதன் ஒப்புவமை உயிர்த்தெழுதலின் நிச்சயத்தை உள்ளடக்குகிறது. மரணம் தற்காலிகமானதே, இந்த உறக்கத்தில் இருந்து எழுப்பும் வல்லமையை இயேசு ஒருவரே கொண்டுள்ளார்.*[12]

**வசனம் 25.** துக்கம் கொண்டாடியவர்கள் அறையை விட்டு வெளியே சென்றபின்பு - இயேசு, பேதுரு, யாக்கோபு மற்றும் யோவான் ஆகியோருடன் - அற்புதத்தைக் காண்பதற்கு அந்தப் பெண்ணின் பெற்றோர்கள் அங்கிருந்தனர் (மாற்கு 5:37, 40). அந்தப் பெண்ணின் தந்தையினுடைய தொடக்க வேண்டுகோளை அவருக்கு நிறைவேற்றுவதற்காக, இயேசு அந்தச் **சிறுபெண்ணின் கையைப் பிடித்தார்** (9:18). அவர் அவளுக்குக் கூறிய வார்த்தைகளை மத்தேயு குறிப்பிடவில்லை, ஆனால் மாற்கு 5:41ம் வசனம், அவர் "'தலீத்தாகூமி என்றார்!' (அதற்கு, 'சிறுபெண்ணே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன் என்று அர்த்தமாம்'!)" என்று கூறியதாக உரைக்கிறது. இது, "சிறு வெள்ளாட்டுக் குட்டியே, எழுந்திரு என்று உனக்குச் சொல்லுகிறேன்." என்று நேரடியாக மொழிபெயர்க்கப்படக் கூடிய அரமாயிக் சொற்றொடராக உள்ளது.

இயேசு அவளைத் தொட்டு இந்த வார்த்தைகளை உரைத்தபோது, **அவள் எழுந்திருந்தாள்** (காண்க மாற்கு 5:42). லூக்கா 8:55ம் வசனம், "*அப்பொழுது அவள் உயிர் திரும்ப வந்தது;* உடனே அவள் எழுந்திருந்தாள்; அவருக்கு ஆகாரங்கொடுக்கக் கட்டளையிட்டார்" என்று கூடுதலாகக் கூறுகிறது (வலியுறுத்தம் கூட்டப்பட்டுள்ளது).

பெரும்பாடுள்ள பெண்ணின் விஷயத்தில் போன்றே, இயேசு மீண்டும் ஒருமுறை தீட்டானவர்களுடன் தொடர்புகொள்ள வந்தார்; மரித்துப்போன ஒரு பெண்ணின் உடலை அவர் தொட்டார் (எண்ணாகமம் 19:11-21). இரண்டு நிகழ்வுகளிலும், இயேசு தாமே தீட்டுள்ளவர் ஆவதற்குப் பதிலாக, தமது குணமாக்கும் வல்லமையினால் அவர்களைச் சுத்தமாக்கினார். அவருக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகளான, எலியா மற்றும் எலிசா (1 இராஜாக்கள் 17:17-24; 2 இராஜாக்கள் 4:17-37), மற்றும் அவருக்குப் பின்வந்த அப்போஸ்தலர்களான, பேதுரு மற்றும் பவுல் (நடபடிகள் 9:36-42; 20:9-12) ஆகியோரைப் போன்றே, இயேசுவும் மரித்தவர்களை உயிரோடே

*திரும்பக் கொண்டுவந்தார் (9:25; லூக்கா 7:11-17; யோவான் 11:38-46). மரித்தோரை இயேசு உயிரோடு எழுப்பினார் என்ற உண்மையானது, மேசியாத்துவ அடையாளமாக மக்களிடத்தில் செயல்பட்டது (11:4, 5). இருப்பினும், கல்லறையில் இருந்து அவர்தாமே உயிரோடு எழுந்ததுதான் எல்லாவற்றிலும் மாபெரும் அடையாளமாக இருந்தது. யவீருவின் மகளை உயிரோடு எழுப்பியது, தொடக்ககால வாசகர்களுக்கு "அவர்களின் சொந்த உயிர்த்தெழுதலில் முன்னிழலிடுதலை" தெரியப்படுத்திற்று என்பதில் சந்தேகம் இல்லை.[13] கர்த்தருக்குள் மரித்திருப்பவர்கள் "உறங்கிக்கொண்டு" மாத்திரமே இருக்கின்றனர்; அவரது மறுவருகையின்போது அவர்கள் எழுப்பப்படுவார்கள் (1 தெசலோனிக்கேயர் 4:14, 15).*

***வசனம் 26.*** *இந்த அற்புதத்தைப் பற்றி அங்கிருந்தவர்கள் யாருக்கும் தெரியப்படுத்தக் கூடாது என்று இயேசு "உறுதியாகக் கட்டளையிட்டார்" (மாற்கு 5:43; காண்க லூக்கா 8:56). இருந்தபோதிலும், **இந்தச் சங்கதி அத்தேசமெங்கும் பிரசித்தமாயிற்று**. துக்கம் கொண்டாடியவர்கள் யாவரும், அந்தப் பெண் மரித்திருந்தாள் என்பதை அறிந்திருந்தபடியால், இந்த அற்புதத்தை இரகசியமாய்க் காத்துக்கொள்ளுதல் கடினமானதாக இருந்தது. அவள் மீண்டும் உயிர்பெற்றாள் என்பதை அவர்கள் கண்டறிந்தபோது, இயேசு மரணத்தின்மீதும் அதிகாரம் கொண்டிருந்தார் என்ற செய்தியானது விரைவில் பரவிற்று!*

## *பார்வையற்ற இருமனிதர்களைக் குணமாக்குதல் (9:27-31)*

***27இயேசு அவ்விடம் விட்டுப் போகையில், இரண்டு குருடர் அவர் பின்னே சென்று: தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்.***

***28அவர் வீட்டிற்கு வந்தபின்பு, அந்தக் குருடர் அவரிடத்தில் வந்தார்கள். இயேசு அவர்களை நோக்கி: இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா என்று கேட்டார். அதற்கு அவர்கள்: ஆம் விசுவாசிக்கிறோம், ஆண்டவரே! என்றார்கள்.***

***29அப்பொழுது, அவர்களுடைய கண்களை அவர் தொட்டு: உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது என்றார்.***

***30உடனே அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது. இதை ஒருவரும் அறியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசு அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.***

***31அவர்களோ புறப்பட்டு, அத்தேசமெங்கும் அவருடைய கீர்த்தியைப் பிரசித்தம்பண்ணினார்கள்.***

***வசனம் 27.*** *இரக்கம் மற்றும் குணமாக்குதல் ஆகியவற்றிற்கான அதிகமான வேண்டுகோளுடன் மீண்டும் நிறுத்தப்படாது இயேசு தூரம் செல்ல இயலாதிருந்தார்: இரண்டு குருடர் அவர் பின்னே சென்று: **தாவீதின் குமாரனே, எங்களுக்கு இரங்கும் என்று கூப்பிட்டார்கள்.**[14] பார்வையற்ற தன்மை என்பது சுகாதாரக் குறைவான சூழ்நிலைகள், நோய்த்தொற்றுகள், துன்பம் விளைவிக்கும் உயிரினங்கள், வாரியிறையும் மணல், விபத்துகள்,*

போர்க்காயங்கள், சத்துணவுக் குறைவு, பிறவியிலேயே பிரச்சனைகள் அல்லது அதிகபட்சமான வெப்பம் ஆகியவற்றால் ஏற்படக்கூடும்.

"கூப்பிட்டார்கள்" என்பதற்கான (*krazō*) கிரேக்க வார்த்தையானது, உரத்துச் சத்தமிடுதல் அல்லது வலிவாகக் கூப்பிடுதல் என்பதைக் கருத்தாகத் தெரிவிப்பதாக உள்ளது. அவர்கள் குறைந்த பட்சம் இரண்டு காரணங்களுக்காக இதைச் செய்திருக்க வேண்டும். அவர்கள் அவரது கவனத்தை ஈர்க்க விரும்பினர் என்பது தெளிவு. அத்துடன் கூடுதலாக அவர்கள் அனேகமாக, மக்கள் கூட்டத்தின் இரைச்சலுக்கு மேலாகத் தாங்கள் பேசுவது கேட்கப்பட வேண்டும் என்று முயற்சி செய்திருக்கலாம். அவர்கள் தங்கள்மீது "இரங்கவேண்டும்" என்று இயேசுவை நோக்கிக் கூப்பிட்டனர், இது மத்தேயு சுவிசேஷ விபரத்தில் பொதுவான வேண்டுகோளாக உள்ளது (15:22; 17:15; 20:30, 31). இந்த மனிதர்கள் "தாவீதின் குமாரன்" என்ற இயற்பெயரைப் பயன்படுத்தியதால், இவர்கள் இயேசுவின் மேசியாத்துவத்தை உணர்ந்து அறிந்திருந்தனர் என்பது தெளிவு. இது வரவிருந்த மேசியாவுக்கான மிகப் பொதுவான இயற்பெயர்களில் ஒன்றாக இருந்தது (1:1; 12:23; 15:22; 20:30, 31; 21:9, 15; 22:42; மாற்கு 10:47, 48; 12:35; லூக்கா 18:38, 39; 20:41; காண்க 2 சாமுவேல் 7; சங்கீதம் 89).

இம்மனிதர்களால் அறிவிக்கப்பட்ட மேசியாத்துவ இயற்பெயருடன் கூடுதலாக, இவர்களின் பார்வையற்ற தன்மையை இயேசு குணமாக்கியதும் சேர்ந்து, மேசியாத்துவ முன்னெதிர் நோக்குதல்களின் நிறைவேற்றத்தை அடையாளம் காண்பித்தது. டொனால்டு A. ஹேங்கர் அவர்கள், "இயேசு, வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட மேசியாவா அல்லவா என்பது பற்றிய யோவான் ஸ்நானனின் கேள்விக்கு அளிக்கப்பட்ட பதிலின் பட்டியலில், பார்வையற்றவரை குணமாக்குதல் என்பது முதலாவதாகக் குறிப்பிடப் பட்டுள்ளது (11:5)" என்று சுட்டிக்காண்பித்தார்.[15]

**வசனம் 28.** இயேசு கப்பர்நகூமில் தாம் **தங்கியிருந்த வீட்டிற்குள்** வந்து சேர்ந்தார். பார்வையற்ற இரு மனிதர்களும் இயேசுவைப் பின்தொடர்ந்தனர் மற்றும் இல்லத்திற்குள் வரும்படி அழைக்கப்பட்டனர். இரக்கம் வேண்டும் என்று கேட்டதன் மூலம் அவர்கள் தங்கள் விசுவாசத்தைச் செயல்விளக்கப்படுத்தி இருந்தபோதிலும் (9:27), **இயேசு** அவர்களைப் பரிசோதித்தார்: **இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா?** அவர்களின் பதிலுரை உடனடியானதாக இருந்தது: **ஆம் விசுவாசிக்கிறோம், ஆண்டவரே!**

**வசனம் 29.** பார்வையற்றவர்களைக் குணமாக்கிய மற்ற விஷயங்களில் இயேசு, வழக்கத்திற்கு மாறான சில செயல்களைச் செய்திருந்தார் (மாற்கு 8:22-26; யோவான் 9:6, 7). இருப்பினும் இவ்விரு மனிதர்களிடத்தில், வெறுமனே அவர்களுடைய **கண்களை அவர் தொட்டு "உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது"** என்று கூறினார். மீண்டும் ஒருமுறை இயேசுவின் தொடுதலினுடைய வல்லமை வலியுறுத்தப்படுகிறது (8:3, 15; 9:18, 20, 21, 25). குணமாக்குதலின் ஒவ்வொரு நிகழ்வுக்கும் விசுவாசம் தேவைப்படவில்லை என்றிருக்கையில், இவ்விடத்தில் உள்ளது போன்ற கூற்றை இயேசு அடிக்கடி ஏற்படுத்தினார் (காண்க 8:13; 9:22). இது குறிப்பிட்ட நபருடைய ஒப்புவித்தலைப் பரிசோதிக்கும் நோக்கம் கொண்டிருக்கலாம். கேர்ஸ்ன் அவர்கள், இது "அவர்களின் விசுவாசத்தை அதிகப்படுத்தி அதைக் கவனம் குவித்தலுக்கான கருவியாக இருந்தது" என்று முன்மொழிந்தார்.[16]

***வசனங்கள் 30, 31.*** *உடனே* ***அவர்களுடைய கண்கள் திறக்கப்பட்டது*** *என்ற சொல்விளக்கம், அவர்களின் பார்வை மீட்டுத்தரப்பட்டது என்று மாத்திரமே அர்த்தப்படுகிறது. அம்மனிதர்கள் குணமாக்கப்பட்ட பின்பு,* ***இதை ஒருவரும் அறியாதபடிக்கு எச்சரிக்கையாயிருங்கள் என்று இயேசு அவர்களுக்குக் கண்டிப்பாய்க் கட்டளையிட்டார்.*** *வீட்டிற்குள் நடந்த இந்த அற்புதம் (9:28), இரகசியமாய் வைத்துக்கொள்ள அதிக வாய்ப்பை அளித்தது. மீண்டுமாக, அவர்கள் குணமானதை மற்றவர்களுக்குக் கூறக்கூடாது என்ற இயேசுவின் கண்டிப்பான அறிவுறுத்துதல் இருந்தபோதிலும்,* ***குணமாக்கப் பட்டவர்கள் புறப்பட்டு, அத்தேசமெங்கும் அவருடைய கீர்த்தியைப் பிரசித்தம்பண்ணினார்கள்*** *(காண்க 8:4; 9:26 ஆகியவற்றிற்கான விளக்கங்கள்).*

*பார்வையற்றிருந்த இவ்விரு மனிதர்களும், ஒருவேளை மன எழுச்சிக்காக மாத்திரம் இந்தச் செய்தியை யாவருக்கும் கூறி இருக்கலாம் அல்லது மாபெரும் வைத்தியரைப் பற்றி வியாதிப்பட்டிருந்த மற்ற மக்கள் அறிய வேண்டும் என்று அவர்கள் விரும்பி இருக்கலாம். அவர்களின் காரணம் எதுவாக இருந்தபோதிலும், அவர்கள் குணமாக்கப்பட்டிருந்தனர் என்ற செய்தியைப் பரப்புதல் என்பது இயேசுவின் கட்டளைக்குக் கீழ்ப்படியாமையாக இருந்தது. அவர்கள் இயேசுவின் பரிவிரக்கத்திற்கு, தங்களிடம் அவர் கேட்டுக்கொண்டதைச் செய்யத் தவறியதைக் கொண்டு பதில் செலுத்தினர்.*

## *பிசாசு பிடித்த வாய்பேச இயலாத ஒரு மனிதரை குணமாக்குதல் (9:32-34)*

***[32]அவர்கள் புறப்பட்டுப் போகையில், பிசாசுபிடித்த ஊமையான ஒரு மனுஷனை அவரிடத்தில் கொண்டுவந்தார்கள்.***

***[33]பிசாசு துரத்தப்பட்ட பின்பு ஊமையன் பேசினான். ஜனங்கள் ஆச்சரியப்பட்டு: இஸ்ரவேலில் இப்படி ஒருக்காலும் காணப்படவில்லை என்றார்கள்.***

***[34]பரிசேயரோ: இவன் பிசாசுகளின் தலைவனாலே பிசாசுகளைத் துரத்துகிறான் என்றார்கள்.***

***வசனம் 32.*** *பிசாசு பிடித்திருந்த இம்மனிதர், குணமாக்கப்பட்ட பார்வையற்ற இரு மனிதர்களால் இயேசுவினிடத்தில் கொண்டுவரப் பட்டாரா? விஷயம் இவ்வாறு இருப்பதாக வசனப்பகுதி கருத்து எதையும் தெரிவிப்பதில்லை; மற்றும் அவர்கள் அப்படிப்பட்ட கண்டிப்பான கட்டளைக்குக் கீழ்ப்படியாமல் போயிருந்தபின்பு, அவர்கள் அவ்வளவு விரைவாகத் திரும்பி வந்திருப்பார்களா என்பது சந்தேகமாகவே உள்ளது.* ***அவர்கள் புறப்பட்டுப் போகையில் என்பது,*** *இயேசுவைப் பற்றியும் அவரது சீஷர்களைப் பற்றியும் பேசுகிறது என்பது தெளிவு, இது* ***அவரிடத்தில்*** *என்ற பிரதிப்பெயர்ச் சொல்லினால் அவசியப்படுத்தப்படுகிறது.* ***பிசாசுபிடித்த ஊமையான மனுஷன்,*** *மற்றவர்களினால் இயேசுவினிடத்தில்* ***கொண்டுவரப் பட்டார்*** *என்று முடிவு செய்தல் மிகச்சிறந்ததாக இருக்கிறது.*

***ஊமை*** *என்பதற்கு இவ்விடத்தில் பயன்படுத்தப்பட்டுள்ள*

(*kōphos*) வார்த்தை, காது கேளாத தன்மையையும் (11:5) பேச இயலாத தன்மையையும் (12:22) உள்ளடக்க இயலும். இவ்விரண்டும் அடிக்கடி ஒன்றாகவே இருக்கின்றன, ஏனெனில் கேட்க இயலாத ஒரு நபர் பேசுவது எப்படி என்று கற்றுக்கொள்ள இயலாதவராக இருக்கிறார். இவ்விஷயத்தில், அம்மனிதர் பேச இயலாதவராக இருந்தார் என்று மாத்திரம் நாம் அறிகிறோம், ஏனெனில் "ஊமையன் பேசினான்" (9:33) என்பதே இந்த அற்புதத்தின் விளைவாக இருந்தது. ஒரு அசுத்த ஆவி பிடித்திருந்ததால் அவன் பேச இயலாதவனாக இருந்தான். அசுத்த ஆவிகள், பேச இயலாத் தன்மை, கேட்க இயலாத் தன்மை, பார்க்க இயலாத் தன்மை, சுயமாக ஊனமாக்கிக் கொள்ளுதல், கடும்வலிப்புகள், உடல் விரைப்படைதல், பற்களைக் கடித்தல் மற்றும் வாயில் இருந்து நுரை தள்ளுதல் ஆகியவை உட்பட (12:22; மாற்கு 1:26; 5:5; 9:18, 25), உடல்ரீதியான எண்ணற்ற பிரச்சனைகளுக்குக் காரணம ாயிருந்தன.

**வசனங்கள் 33, 34.** இயேசுவினால் **பிசாசு துரத்தப்பட்ட பின்பு** உடனே **ஊமையன் பேசினான்.** மக்களின் பதில் செயல் என்னவாக இருந்தது? முதலில் **ஜனங்கள் ஆச்சரியப்பட்டனர்.** அவர்கள், **இஸ்ரவேலில் இப்படி ஒருக்காலும் காணப்படவில்லை** என்று கூறினர். பழைய ஏற்பாடு அற்புதங்களைக் கொண்டு நிரப்பப் பட்டிருக்கையில், இயேசுவினால் நிகழ்த்தப்பட்ட அற்புதங்களின் எண்ணிக்கை மற்றும் பல்வகைத்தன்மை என்பது இஸ்ரவேலின் வரலாற்றில் இணையற்றதாக இருந்தது. "ஆச்சரியப்பட்டனர்" என்பதற்கான (*thaumazō*) கிரேக்க வார்த்தை, "திகைப்படைந்தனர்" என்றும் மொழிபெயர்க்கப்படுகிறது, இது திகைப்படைதல் அல்லது பயம்கலந்த ஆச்சரியத்தினால் மேற்கொள்ளப்படுதல் என்பதை மறைமுகமாக உணர்த்துகிறது. இயேசுவின் அற்புதங்களின் அளவும் வகையும் அதிகரிக்கையில், மக்கள் அதிகம் அதிகமாகத் திகைப்படைந்தனர்.

இரண்டாவதாக, **பரிசேயரின்** பதில்செயல்,பொதுவான யூதஜனங்களின் பதில் செயலில் இருந்து பெரிதும் வேறுபட்டிருந்தது. அவர்கள், இயேசு **பிசாசுகளின் தலைவனாலே** அதாவது "பெயல்செபூலினாலே" **பிசாசுகளைத் துரத்துகிறார்** என்று கூறினர் (காண்க 12:24; மாற்கு 3:22). பரிசேயர்கள், பிசாசுகளைத் துரத்த இயேசு கொண்டிருந்த வல்லமை, தேவனுடமிருந்தோ அல்லது பரிசுத்த ஆவியானவரிடம் இருந்தோ வரவில்லை, ஆனால் பிசாசிடம் இருந்தே வந்தது என்று கூறினர். அவர்கள் குற்றச்சாட்டிற்கு, மத்தேயு 12:25-30ல் இயேசு பதில் அளித்தார்:

> தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்த ராஜ்யமும் பாழாய்ப்போம்; தனக்குத் தானே விரோதமாய்ப் பிரிந்திருக்கிற எந்தப் பட்டணமும் எந்த வீடும் நிலைநிற்கமாட்டாது. சாத்தானைச் சாத்தான் துரத்தினால் தனக்கு விரோதமாகத் தானே பிரிவினை செய்கிறதாயிருக்குமே; அப்படிச் செய்தால் அவன் ராஜ்யம் எப்படி நிலைநிற்கும்? நான் பெயெல்செபூலினாலே பிசாசுகளைத் துரத்தினால், உங்கள் பிள்ளைகள் அவைகளை யாராலே துரத்துகிறார்கள்? ... என்னோடே இராதவன் எனக்கு விரோதியாயிருக்கிறான்; என்னோடே சேர்க்காதவன் சிதறடிக்கிறான்.

*இயேசுவின் அற்புதங்களினுடைய ஆதாரமூலத்தைத் தாக்குதல் என்பதே, பரிசேயர்களால் கூறப்பட்ட இந்தக் குற்றசாட்டின் தெளிவான விருப்பநோக்கமாக இருந்தது. அற்புதங்களை அவர்களால் நேரடியாகத் தாக்க முடியவில்லை, ஏனெனில் அற்புதங்கள் மிகவும் எண்ணற்றவையாக இருந்தன, மற்றும் அவற்றின் காரணமாக மக்கள்கூட்டம் அவரில் விசுவாசம் கொண்டிருந்தது. இருப்பினும் மக்கள் கூட்டம் அவரில் விசுவாசம் கொண்டதா அல்லது அவரது அற்புதங்களை மாத்திரம் நம்பியதா என்று நாம் ஆச்சரியப்படுகிறோம்.*

*மக்கள் கூட்டத்தின் பதில்செயலுக்குப் பரிசேயர்கள் அஞ்சியதால், அவர்கள் - அற்புதங்களை மறுத்தலினால் அல்ல ஆனால் அவற்றை "பிசாசுகளின் தலைவன்" என்ற பொல்லாத ஆதாரமூலத்தின் உதவியுடன் இயேசு அற்புதங்களைச் செய்கிறார் என்று கூறி - இயேசுவைக் கனவீனப்படுத்த முயற்சி செய்தனர். இவ்வேளையில் இயேசு, பரிசேயர்கள் ஏற்படுத்தியிருந்த குற்றச்சாட்டைப் புறக்கணித்து தமது பிரசங்க ஊழியத்தைத் தொடர்ந்தார் என்பது தெளிவு. அவர் - குறைந்த பட்சம், தமது ஊழியத்தின் இந்த வேளையில் - அவர்களின் குற்றச்சாட்டை தமக்குச் சொந்த வகையிலோ அல்லது தமது ஊழியத்திற்கோ ஒரு அச்சுறுத்தலாகக் கருதவில்லை.*

## *இயேசுவின் ஊழியத்தினுடைய தொகுப்புரை (9:35-38)*

***35பின்பு, இயேசு சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து, ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து, ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார்.***

***36அவர் திரளான ஜனங்களைக் கண்டபொழுது, அவர்கள் மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போலத் தொய்ந்துபோனவர்களும் சிதறப்பட்டவர்களுமாய் இருந்தபடியால், அவர்கள்மேல் மனதுருகி, தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்; ஆதலால் அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்கள் அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள் என்றார்.***

*9:35-38 வசனப்பகுதியைக் குறித்து R. T. ஃபிரான்ஸ் அவர்கள் பின்வருமாறு எழுதினார்:*

> *இவ்வசனங்கள், 5-9 அதிகாரங்களில் இயேசுவின் ஊழியம் பற்றிய தொகுப்புரை மற்றும் 10ம் அதிகாரத்தில் சீஷர்களின் [வரையறைக்குட்பட்ட] ஊழியம் பற்றிய அறிமுகம் என்ற இரட்டைப் பணிப்பொறுப்பினால் நிரம்பியுள்ளன. முன்னோக்கியும் பின்னோக்கியும் காணும்படிக்கும், இப்புத்தகத்தின் இவ்விரு பிரிவுகளுக்கு இடையில் தொடர்ச்சியை வலியுறுத்தும்படிக்கும், வார்த்தை அமைப்பு கவனத்துடன் வடிவமைக்கப்பட்டுள்ளது.[17]*

***வசனம் 35.*** *இவ்வசனம் ஏறக்குறைய, 4:23ன் சொல்லாடலாகவே*

*உள்ளது. இது 5 முதல் 9 வரையிலான அதிகாரங்களின் உள்ளடக்கமாகச் செயல்படுகிறது, இது இயேசுவின் போதனை (அதிகாரம் 5-7) மற்றும் செயல்கள் (அதிகாரம் 8; 9) ஆகியவற்றை உள்ளடக்கும் அலகாக இருக்கிறது. இருப்பினும், "கலிலேயா எங்கும்" என்ற குறிப்பு* ***சகல பட்டணங்களையும் கிராமங்களையும்*** *என்று தழுவப்பட்டுள்ளது. கிறிஸ்துவின் காலத்தில் அந்தப் பகுதியில் 240 பட்டணங்களும் கிராமங்களும் இருந்தன என்று யோசிப்பஸ் அவர்கள் மதிப்பிட்டார்.*[18] *யோசிப்பஸ் அவர்களின் சாட்சியத்தை நாம் ஏற்றுக்கொண்டால், மற்றும் இயேசு ஒவ்வொரு நாளும் இரண்டு பட்டணங்கள் அல்லது இரண்டு கிராமங்களுக்குச் சென்றிருந்தால், அவை எல்லாவற்றிற்கும் சென்று முடிப்பதற்கு, அவருக்குச் சுமார் நான்கு மாதங்கள் தேவைப்பட்டிருக்கும். இருப்பினும் மொழிநடையை நாம் மிகவும் நேர்ப்பொருளில் வலியுறுத்தக் கூடாது. இயேசு கலிலேயாவில் தமது ஊழியத்தின்போது மற்ற பல செயல்களைச் செய்தார் என்றும் அவரது ஊழியத்தில் இருந்து தேர்ந்தெடுக்கப்பட்ட வரலாறுகளை மத்தேயு தமது வாசகர்களுக்கு மாதிரியாகக் கொடுத்தார் என்றும் தொகுப்புக் கூற்று சுட்டிக்காண்பிக்கிறது (காண்க யோவான் 20:30, 31; 21:25). இயேசு பட்டணங்கள் மற்றும் கிராமங்களினூடே கடந்து செல்லுகையில்,* ***அவர்களின் ஜெப ஆலயங்களில் அவர் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கினார்*** *(காண்க 4:23ன் மீதான விளக்கவுரைகள்).*

***வசனம் 36.*** *மக்களின் நலம் குறித்து இயேசு, ஆழமான வேர்பற்றிய அக்கறையைக் கொண்டிருந்தார். அவர்களின் உடல்ரீதியான நலம் குறித்து அவர் அக்கறை கொண்டிருந்தார் என்று மற்ற இடங்களில் நமக்குக் கூறப்படுகிறது (14:13, 14; 15:30-32; 20:34), ஆனால் இவ்விடத்தில் அவரது அக்கறை அவர்களின் ஆவிக்குரிய நலன் குறித்ததாக இருந்தது.* ***மனதுருகி*** *என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ள; வினைச்சொல், வலிவார்ந்த உணர்வுகளை விவரிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது; (splanchna) தொடர்புடைய பெயர்ச்சொல், வயிற்று உறுப்புகள் அல்லது குடல்கள் என்பதைக் குறிக்கிறது.* ***தொய்ந்துபோனவர்களும்*** *(skullō) என்ற கிரேக்க வினைச்சொல், தொல்லைப் படுத்தப்பட்டு இருத்தல் அல்லது கடுமையாக துன்புறுத்தப்பட்டு இருத்தல் என்ற கருத்தைக் கொண்டுவருகிறது. மக்கள், தாங்கள் நிலைதடுமாறியது போல, அடைவிடம் எதுமின்றி தொடர்ந்து அலைந்து கொண்டு இருப்பது போல நடந்துகொண்டனர். அவர்கள்* ***சிதறப்பட்டவர்களுமாய்*** *(rhiptō) ஆக இருந்தனர். "எறிதல்" என்று அர்த்தப்படுத்த, இந்த வினைச்சொல் புதிய ஏற்பாட்டில் அடிக்கடி பயன்படுத்தப்படுகிறது, ஆனால் இது "கீழே கிடத்துதல்" அல்லது "கீழாக இட்டிருத்தல்" என்ற கருத்தையும் கொண்டிருக்கக் கூடும். ஒருவேளை ஹேங்கர் அவர்கள் கருத்துரைத்தபடி, இந்தச் சொற்றொடர் " 'குழப்பம் அடைந்த' அல்லது 'சக்தி தீர்ந்த' என்பது போன்ற சிலவற்றை உருவகிக்கப் பயன்படுத்தப்பட்டுள்ளது."*[19]

*மக்கள் கூட்டத்தினர் வழிகாட்டுதல் இன்றி ஆவிக்குரிய புரிந்துகொள்ளுதலில் வெறுமையானவர்களாக இருந்ததை இயேசு கண்டார். அவர்கள்* ***மேய்ப்பனில்லாத ஆடுகளைப்போல*** *இருந்தனர் என்று*

அவர் விவரித்தார். இந்தச் சொல்விளக்கம் பழைய ஏற்பாட்டில் அடிக்கடி காணப்படுகிறது (எண்ணாகமம் 27:17; 1 இராஜாக்கள் 22:17; 2 நாளாகமம் 18:16; ஏசாயா 13:14; காண்க எசேக்கியேல் 34:5; சகரியா 10:2; 11:5) மற்றும் இதே கருத்து புதிய ஏற்பாட்டிலும் எடுத்தாளப்படுகிறது (மத்தேயு 9:36; மாற்கு 6:34). மேய்ப்பர்களும் ஆடுகளும் பழைய ஏற்பாட்டில் அடிக்கடி ஒப்புவமையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன(ர்) (சங்கீதம் 23:1-6; 77:20; 78:52; 95:7; 100:3; ஏசாயா 40:11). இயேசு தம்மைப் பற்றிக் குறிப்பிடுவதற்கு இதே உருவகத்தைப் பயன்படுத்தினார் (யோவான் 10:11-16). மேய்ப்பனுக்கும் அவனது ஆடுகளுக்கும் மென்மையான மற்றும் நெருக்கமான உறவு நிலவிற்று; அவைகளை அவன் பசும்புல் வெளிகளுக்கு வழிநடத்திச் செல்லுவான், அவைகளை இரையாக உட்கொள்ளக்கூடிய விலங்குகளிடமிருந்து அவற்றைப் பாதுகாப்பான், மற்றும் அவைகள் வழிதவறிச் சென்றால் அவற்றைத் தேடுவான் (லூக்கா 15:3-7). இயேசு "நல்ல மேய்ப்பராக" இருந்தார் (யோவான் 10:11; காண்க எபிரேயர் 13:20; 1 பேதுரு 2:25; 5:4); ஆனால் அந்த நாட்களின் கூலிக்காரர்கள் - பரிசேயர்கள், வேதபாரகர்கள் மற்றும் ரபீக்கள் - மந்தையைக் கைவிட்டு, அவைகள் தங்களைத் தாங்களே ஆதரித்துக் கொள்ளும்படி விட்டிருந்தனர்.

**வசனங்கள் 37, 38.** பின்பு, இயேசு ஆடுகளின் உருவகத்தில் இருந்து அறுப்பின் உருவகத்திற்கு மாறினார். **தம்முடைய சீஷர்களை நோக்கி: அறுப்பு மிகுதி, வேலையாட்களோ கொஞ்சம்** என்றார். சமாரியாவுக்குச் சென்ற ஒரு பயணத்தில் அவர் தமது சீஷர்களிடம் "இதோ, வயல்நிலங்கள் இப்பொழுதே அறுப்புக்கு விளைந்திருக்கிறதென்று உங்கள் கண்களை ஏறெடுத்துப்பாருங்கள்" என்று கூறினார் (யோவான் 4:35). "இழந்து போனவர்களுக்காக ஜெபியுங்கள்" என்பது ஒரு நல்ல முடிவாக இருந்தபோதிலும், அவர் வெறுமனே ஜெபிக்கும்படி மாத்திரம் கூறவில்லை. அதற்குப் பதிலாக அவர், **அறுப்புக்கு எஜமான் தமது அறுப்புக்கு வேலையாட்களை அனுப்பும்படி அவரை வேண்டிக்கொள்ளுங்கள்** என்று கூறினார். இயேசுவின் நாட்களில், "அறுப்புக்கு எஜமான்" என்பவர், கூலிக்கு ஆட்களை அமர்த்தி அவர்களை வயலுக்கு அனுப்பும் மனிதராக இருந்தார். அவர்களின் கூலியைக் கொடுப்பதற்கும் அவர் பொறுப்பாளியாக இருந்தார். இந்தத் தனிமனிதர், அறுப்புக்குப் பொறுப்பாளியாக வைக்கப்பட்ட ஒரு மேஸ்திரியாக அல்லது உண்மையிலேயே நிலத்துக்குச் சொந்தக்காரராக இருந்திருக்கலாம். இயேசுவின் உவமையில், கூலியாட்களை அமர்த்தி தமது திராட்சத் தோட்டத்திற்கு அனுப்பி, நாளின் முடிவில் அவர்களுக்குக் கூலி கொடுத்தவர், நிலத்தின் சொந்தக்காரராகவே இருந்தார் (20:1-16). இந்த சந்தர்ப்பப் பொருளில், தேவன் (அல்லது இயேசு) "அறுப்புக்கு எஜமான்" என்று சித்தரிக்கப்பட்டுள்ளார், மற்றும் இந்த உலகமே அவரது தோட்டமாக இருக்கிறது. நற்செய்தியை அறிவித்து, ஆத்துமாக்களை இராஜ்யத்திற்குள் கொண்டுவருபவர்கள் கூலியாட்களாக உள்ளனர். அறுவடை என்ற இந்த உருவகம் வேறோரு இடத்தில் கடைசி நியாயத்தீர்ப்புக்குப் பயன்படுத்தப்பட்டுள்ளது (3:12; 13:24-30, 36-43; வெளிப்படுத்தின விசேஷம் 14:14-20). கூலியாட்களின் குறைவு பற்றிக் குறிப்பிட்ட பின்பு இயேசு, விளைந்த வயலுக்கு அனுப்புவதற்கு, தமது சீஷர்களில், குறிப்பிட்ட சிலரைத் தேர்ந்தெடுத்தார் (10:1).

## *தடைகளைச் சமாளித்தல் (9:20-22)*

*9:20-22ல் இயேசுவின் உடையைத் தொட்ட பெண் இயேசுவை அணுகுவதற்குப் பல தடைகளை சமாளிக்க வேண்டியிருந்தது. முதலாவது அவள், மக்கள் கூட்டத்தை சமாளித்தாள். மக்கள் பலர் இயேசுவைச் "சூழ்ந்து நெருக்கிக் கொண்டிருந்தனர்" (லூக்கா 8:45); அவரிடம் செல்லும்படிக்கு மற்ற பலரும் மிகவும் முயற்சி செய்துகொண்டிருந்தனர் என்பதில் சந்தேகம் இல்லை. இரண்டாவது அவள், வெளிப்படையாக சிறுமைப்படுத்தப்படுதலையும் கடிந்து கொள்ளப்படுதலையும் எதிர்கொண்டாள்; ஆனால் அவள் தனது பயத்தை வெற்றிகொண்டு, இயேசுவின் உடையைத் தொடும்படி அவரைப் போதுமான அளவுக்கு நெருங்குவதற்கு, மக்கள் கூட்டத்தினூடே தள்ளிக்கொண்டு, தனக்கு வழி ஏற்படுத்திச் சென்றாள். மூன்றாவது அவள், சுகமாக்கப்படாது இருக்கும் சாத்தியக்கூறை எதிர்கொண்டாள். இந்த இடர்ப்பாடுகளை மேற்கொள்ள அவளது விசுவாசமே அவளுக்குத் தைரியம் கொடுத்தது (9:22).*

## தேவனுடைய வல்லமையில் விசுவாசம் வைத்தல் *(9:27-31)*

*பார்வையற்ற இரு மனிதர்கள், பார்க்க விரும்பியதால் இயேசுவை நாடினர். அவர் "இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா?" என்று கேட்டதன் மூலம் அவர்களின் விசுவாசத்தைச் சோதித்தார் (9:28). அவர் மீது அவர்கள் கொண்டிருந்த விசுவாசத்தை அவர்கள் உறுதிப்படுத்தினர், மற்றும் அவர்களுக்கு அவர் பார்வை கொடுத்தார்.*

*இன்றைய நாட்களில் நாம் தேவனுடைய வல்லமையை உண்மையிலேயே விசுவாசிக்கிறோமா? வெற்றிக்கு ஊக்குவிக்கும் பயற்சிகளில் அமெரிக்கர்கள் ஒவ்வொரு ஆண்டும் ஏராளமான பணத்தைச் செலவழிக்கின்றனர். இந்தப் பயிற்சிகள் பெரும்பான்மையானவற்றில், மக்கள் தங்களைத் தாங்களே நம்பும்படி போதிக்கப்படுகின்றனர். நம்மில் நாம் நம்பிக்கை கொள்ளுதலில் எந்தத் தவறும் இல்லை; நாம் அவ்வாறு நம்புவது அவசியமாகவும் உள்ளது. இருப்பினும், சில பிரச்சனைகள் தாமே கையாள, நமக்குப் பெரியவையாக உள்ளன. வெற்றிக்கு ஊக்குவிக்கும் பயிற்சியில், தேவனுடைய வல்லமையில் விசுவாசம் கொள்ள நமக்கு உதவுதல் என்பதே நமக்கு அத்தியாவசியமானதாக உள்ளது.*

*தேவன் நம் மூலமாகச் செயல்படுகிறார் என்று நாம் விசுவாசிக்கும்போது, நம்மால் செய்ய இயலாதவை கொஞ்சமாகவே உள்ளது. கிறிஸ்து, தாம் விரும்பிய எல்லாவற்றையும் பவுல் மூலமாகச் செய்ய வல்லமையுள்ளவராக இருந்தார் என்பதைப் பவுல் நம்பினார் (எபேசியர் 3:20; பிலிப்பியர் 4:13).*

## இதைச் செய்ய எனக்கு வல்லமை உண்டென்று விசுவாசிக்கிறீர்களா? (9:27-31)

*விசுவாசத்தின் அளவு நமது சிந்தனையைத் தீர்மானிக்கிறது, மற்றும் நமது சிந்தனை நமது ஆவிக்குரிய வளர்ச்சியைத் தீர்மானிக்கிறது. தன்னால் எதையும் சாதிக்க இயலாது என்று நம்புகிற ஒருவர் அந்த நம்பிக்கையை விட்டு மேலே எழும்ப மாட்டார்.*

*தேவன் நினைப்பது போல நாம் நினைப்பதில்லை என்பதை நமக்கு நாமே நினைவூட்டிக் கொள்ள வேண்டும் (ஏசாயா 55:8). தேவனுடைய நோக்கங்களையும் எதிர்பார்ப்புகளையும் நாம் யூகம் செய்ய முயற்சிக்கும்போது, ஒரு தீவிரமான தவறு செய்யப்படுகிறது. "தேவன் என்னிடத்தில் இதை எதிர்பார்க்கிறார் என்று நான் நினைக்கவில்லை" என்பது போன்ற கூற்றுக்கள் தவிர்க்கப்பட வேண்டும். தேவன் காண்பது போன்று சூழ்நிலைகளை நம்மால் எவ்வாறு காணமுடியும்? முதலாவது நாம், நமது சிந்தனைகளைப் புதுப்பிக்க வேண்டும் (ரோமர் 12:1, 2). இரண்டாவது, தேவனுடைய சிந்தை அவரது வசனத்தில் வெளிப்படுத்தப்பட்டுள்ளதால், நாம் வேதாகமத்தைப் படிக்க வேண்டும்.*

*நமது விசுவாசத்தின் அளவை நாம் வளர்த்துக்கொள்வது எவ்வாறு மற்றும் தேவனைப் போன்று அதிகமாக சிந்திக்க நாம் கற்றுக்கொள்வது எவ்வாறு என்பதை மூன்று வசனப்பகுதிகள் வெளிப்படுத்துகின்றன.*

*இயேசுவில் விசுவாசம் கொள்ளுங்கள்* (9:27-31). பார்வையற்ற இரு மனிதர்கள் இயேசுவைப் பின்தொடர்ந்து, தங்கள் மீது இரக்கம் காண்பிக்கும்படி அவரிடம் வேண்டினர். அவர்களுக்குப் பார்வையை அவரால் மீட்டுத்தரமுடியும் என்று அவர்கள் விசுவாசிக்கின்றனரா என்று அவர்களிடம் அவர் கேட்டார், மற்றும் அவர்கள் "ஆம் விசுவாசிக்கிறோம், ஆண்டவரே!" என்று பதில் அளித்தனர் (9:28). பின்பு அவர்களின் கண்களை அவர் தொட்டு, "உங்கள் விசுவாசத்தின்படி உங்களுக்கு ஆகக்கடவது" என்று கூறினார் (9:29). உடனே அவர்கள் தங்கள் பார்வையைப் பெற்றனர்.

*குணமாக்கும் நிகழ்வு ஒவ்வொன்றும், குணமாக்கப்படுபவரின் விசுவாசத்தைச் சார்ந்து இருக்க வில்லை. கால் ஊனமாயிருந்து தனது நான்கு நண்பர்களால் இயேசுவினிடத்தில் தூக்கிச் செல்லப்பட்ட மனிதர், நூற்றுக்கு அதிபதியின் வேலைக்காரர் மற்றும் கெதரா என்ற பகுதியில் இருந்த பிசாசு பிடித்தவர்கள் இதற்கு உதாரணங்களாக உள்ளனர்.*

*இருப்பினும், தேவனுக்கு நாம் பயன்நிறைந்தவர்களாக இருத்தல் என்பது, அவர் மீது நாம் கொண்டுள்ள விசுவாசத்தின் அளவினால் தீர்மானிக்கப்படலாம். செய்யும்படி அவர் விரும்புவது எதுவாக இருந்தபோதிலும், அதை நம்மூலமாக நிறைவேற்றக்கூடியவராக அவர் இருக்கிறார் என்று நாம் விசுவாசிக்க வேண்டும்; தேவனுக்கும் நமக்கும் கையாளுவதற்கு எந்த விஷயமும் பெரியதாக இருப்பதில்லை (19:26).*

*உண்மையான அல்லது கற்பனையான இயலாமையினால், அடிக்கடி நாம் பின்னால் இழுத்துப் பிடிக்கப்படுகிறோம். வயதாகுதல், சுகவீனம் மற்றும் திறமைக் குறைவு ஆகியவை தடைகளாக இருக்கக் கூடும்; ஆனால் ஒருவர், தாம் செய்ய இயலாததைப் பற்றிச் சிந்திப்பதை நிறுத்தும்போது மற்றும்*

தேவனுடைய வல்லமையினால் தான் செய்யக் கூடியவற்றைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கும்போது, "வல்லமையற்று" இருத்தலை நிறுத்துகிறார். "ஆவிக்குரிய வகையில் இயலாதவர்களாக" இருத்தல் என்பது சரீரப்பிரகாரமான சவால் களைக் கொண்டிருத்தலைக் காட்டிலும் மிகவும் மோசமானதாக உள்ளது.

*வெற்றிக்கான தேவனுடைய உறுதிப்பாட்டினால் ஊக்குவிக்கப்படுங்கள் (பிலிப்பியர் 4:13).* நாம் செய்யும்படி தேவன் கொண்டிருப்பவற்றை நிறைவேற்றுவதற்குப் பவுல் மூன்று-படிநிலைத் திட்டம் ஒன்றை முன்வைத்தார்: (1) "என்னைப் பெலப்படுத்துகிறவராலே," (2) "எல்லாவற்றையும் செய்ய," (3) "எனக்குப் பெலனுண்டு." செய்யும்படி தேவன் விரும்புவது எதுவாக இருந்தபோதிலும், அதைப் பவுலின் மூலமாக அவர் செய்யக்கூடியவராக இருந்தார் என்பதைப் பவுல் விசுவாசித்தார்.

தேவனுடைய இராஜ்யத்தில் நமது ஊழிய நிறைவேற்றங்களுக்குத் தேவன் எல்லைகள் எதையும் வைப்பதில்லை. நாம் செய்கிறோம்! "அவன் இருதயத்தின் நினைவு எப்படியோ, அப்படியே அவன் இருக்கிறான்" (நீதிமொழிகள் 23:7). தேவனுடைய இராஜ்யத்தில் பயன்படும் தன்மையில் குறைவு பற்றி நாம் கவலைப்பட்டால், பிரச்சனை தேவனிடத்தில் அல்ல, ஆனால் நமது சிந்திக்கும் முறையில் தான் உள்ளது.

*நம் மூலமாகச் செயல்படும் தேவனுடைய வல்லமையின்மீது கவனம் குவித்தல்* (எபேசியர் 3:20). வசனப்பகுதியை நாம் கவனமாக ஆராய்வோமாக.

"நாம் வேண்டிக்கொள்ளுகிறதற்கும் நினைக்கிறதற்கும்" என்பது தேவன் கொடுக்கும் அளவைக் காட்டிலும் அதிகமாய் நாம் அவரிடத்தில் கேட்க இயலாது என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. "மிகவும் அதிகமாய்" என்பது, "எதிர்பார்ப்பின் அளவுக்கு அப்பால், அதை விட அதிகமாய்" என்று அர்த்தப்படுகிறது. செயலை நிகழ்த்துவதற்குத் தேவன் கொண்டுள்ள வல்லமையை நாம் சுலபமாய் எடை போட இயலாது. தேவனுடைய சித்தமும் நமது விசுவாசமுமே நமது ஒரே வரையறைகளாக உள்ளன. "நமக்குள்ளே கிரியைசெய்கிற வல்லமையின்படியே" என்பது தேவன் தமது வல்லமையைக் கொண்டு நம்மூலமாகச் செயல்படுகிறார் என்பதைச் சுட்டிக்காண்பிக்கிறது. "நமக்குச் செய்ய வல்லவராகிய" என்பது செயலை நிகழ்த்துவதற்குத் தேவன் கொண்டுள்ள வல்லமையைப் பிரதிபலிக்கிறது. "அவருக்கு" என்பது, இந்த அண்டத்தையும் இதில் உள்ள யாவற்றையும் படைத்துத் தாங்குகிற தேவனைக் குறிக்கிறது. நாம் சிறிதாக நினைத்து திட்டமிட்டால், நாம் சிறியவர்களாக இருப்போம். இதற்கு நேர்மாறாக, நாம் பெரிதாக நினைத்து திட்டமிட்டால், நம்மால் பெரியவற்றைச் செய்ய முடியும். தனித்தனிக் கிறிஸ்தவர்கள் அல்லது சபைக்குழுமம் என்ற வகையில் நமது வளர்ச்சி என்பது நமது விசுவாசத்தின் அளவினால் தடைசெய்யப்படுகிறது அல்லது உதவப்படுகிறது.

*முடிவுரை.* நம் மூலமாக எதையாகிலும் செய்ய வேண்டும் என்று தேவன் விரும்பினால், அதைச் செய்ய நாம் தயாராகவும் மனவிருப்பமாகவும் இருக்கும்போது, அது செய்யப்பட முடியும். நமது விசுவாசமே அவருக்கு ஊழியம் செய்வதற்கான நமது திறன் வலிவைத் தீர்மானிக்கிறது.

## *சபையின் ஊழியம் (9:35-38)*

*பிரதான கட்டளை என்பதே சபையின் ஊழியமாக உள்ளது (28:18-20; மாற்கு 16:15, 16). அது "இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே" என்பதாக உள்ளது (லூக்கா 19:10). சபை என்ற வகையில் நாம் செய்யும் வேறு எதுவும் இந்த ஊழியத்திற்குக் கீழ்ப்பட்டதாக மாத்திரம் உள்ளது. அந்த உண்மையை நாம் அடிக்கடி நமது பார்வையில் இருந்து தவற விடுகிறோம்.*

*இயேசு நமது உதாரணமாக உள்ளார் (1 பேதுரு 2:21). அவர், "சகல பட்டணங்களையும் கிராமங்களையும் சுற்றி நடந்து ... ஜனங்களுக்கு உண்டாயிருந்த சகல வியாதிகளையும் சகல நோய்களையும் நீக்கி, அவர்களைச் சொஸ்தமாக்கிய" அதே வேளையில், அவர் "ஜெப ஆலயங்களில் உபதேசித்து, ராஜ்யத்தின் சுவிசேஷத்தைப் பிரசங்கித்து"க் கொண்டும் இருந்தார் (9:35). அவரது பிரசங்கித்தல் மற்றும் போதனை ஆகியவை முதன்மையானவையாக இருந்தன, மற்றும் சகல வியாதிகளையும் சகல நோய்களையும் குணமாக்குதல் என்பது துணையானதாக இருந்தது. அவரைப் பற்றிய நற்சான்றுகளை நிலைநாட்டுதல் மற்றும் அவர் அறிவித்த செய்தியை மதிப்பூட்டுதல் என்பதே இந்த அற்புதங்களின் முதன்மை நோக்கமாக இருந்தது. வண்டிக்கு முன்னால் குதிரை என்ற பழமொழியைக் கொண்டு நாம் செயல்படக்கூடாது. நாம், உடலுக்கு உணவளித்து அதைக் குணமாக்குகையில், ஆத்துமாவை நாம் புறக்கணித்து விட முடியாது.*

## *ஆண்டவரின் அறுவடை (9:37, 38)*

*இன்றைய நாட்களில் இன்னமும் அறுவடை ஏராளமாக உள்ளது, ஆனால் வேலையாட்கள் குறைவாக உள்ளனர். "எண்ணற்ற பலகோடி மக்களுக்கு இன்னும் [சுவிசேஷம்] எடுத்துரைக்கப்படவில்லை." கர்த்தர் தமது சீஷர்களுக்குக் கொடுத்த கட்டளை, இன்றைக்கு சீஷர்களுக்கு நினைவூட்டுதலாக உள்ளது. மார்ஷல் கீபிள் அவர்கள், "நாம் மண் பரிசோதனை செய்பவர்களாக இருக்கக் கூடாது, ஆனால் நாம் விதை விதைப்பவர்களாக இருக்க வேண்டும்" என்று கூறுவது உண்டு. அவ்வாறே, உற்பத்தியின் தரத்தைத் தீர்மானிப்பது நமது பொறுப்பாக இருப்பதில்லை, ஆனால் தேவன் ஏராளமான அறுவடையைப் பெற்றிருக்கும்படிக்கு நம்மால் இயன்ற அளவுக்கு அதிகமாய்ச் சேர்க்க வேண்டியதே நமது பொறுப்பாக உள்ளது. நியாயத்தீர்ப்பின் நாளில், பலன்தராத மற்றும் உரிமை கோரப்படாத செடிகள் வேருடன் பிடுங்கப்பட்டு அக்கினியில் வீசி எறியப்படும் (13:24-30, 36-43; 15:13).*

---

*குறிப்புகள்*

[1]Douglas R. A. Hare, *Matthew,* Interpretation (Louisville: John Knox Press, 1993), 105. [2]Ibid. [3]Robert H. Mounce, *Matthew,* New International Biblical Commentary (Peabody, Mass.: Hendrickson Publishers, 1991), 86. [4]Donald A. Hagner, *Matthew 1-13,* Word Biblical Commentary, vol. 33A (Dallas: Word Books, 1993), 248. [5]H. Leo Boles, *A Commentary on the Gospel According to Matthew* (Nashville: Gospel Advocate Co., 1936), 211. [6]William Hendriksen, *New Testament Commentary: Exposition of the Gospel According to Matthew* (Grand Rapids, Mich.: Baker Book House, 1973), 430. [7]Michael J. Wilkins, "Matthew," in *Zondervan Illustrated*

*Bible Backgrounds Commentary*, vol. 1, *Matthew, Mark, Luke,* ed. Clinton E. Arnold (Grand Rapids, Mich.: Zondervan, 2002), 65. [8]Josephus *Wars* 3.9.5; Mishnah *Baba Metzia* 6.1. [9]Mishnah *Ketuboth* 4.4. [10]Hendriksen, 432-33.

[11]William Barclay, *The Gospel of Matthew,* vol. 1, 2d ed., The Daily Study Bible (Philadelphia: Westminster Press, 1958), 353. [12]Jack P. Lewis, *The Gospel According to Matthew,* Part 1, The Living Word Commentary (Austin, Tex.: Sweet Publishing Co., 1976), 140. [13]Hare, 106. [14]*எரிகோவில் நடந்த இதே போன்ற ஒரு வரலாற்றிற்கு, காண்க மத்தேயு 20:29-34; மாற்கு 10:46-52; லூக்கா 18:35-43 ஆகிய வசனப்பகுதிகளைக் காணவும்.* [15]Hagner, 252. [16]D. A. Carson, *When Jesus Confronts the World: An Exposition of Matthew 8-10* (Grand Rapids, Mich.: Baker Book House, 1987), 100. [17]R. T. France, *The Gospel According to Matthew,* The Tyndale New Testament Commentaries (Grand Rapids, Mich.: Wm. B. Eerdmans Publishing Co., 1985), 174. [18]Josephus *Life* 45. [19]Hagner, 260.